**மாவத்தகம பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 26 ஆந்திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாவத்தகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி கட்டிடங்களின் பெறுமதி ரூபா 3,825,000 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சீராக்கம் செய்யப்படும். |
| (ஆ) | ரூபா 33,818,315 ஆன 13 கணக்கு மீதிகளுக்கரிய சான்றுகள் கணக்காய்விற்கு ,சமர்ப்பிக்கபடவில்லை. | கணக்கு மீதி உறுதிப்படுத்தப்படும் கணக்காய்வுச் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படுவதுடன் அட்டவணை காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படும் |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுட னான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 143(1) ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டில் 13 ஆதனங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டில் 13 ஆதனங்கள் வேறாக்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 26 ஆம் பிரிவு | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய 08 வியாபார இடங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளாமல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் | சட்ட விதிகள் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,308,129 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,726,634 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

2018 ஏப்ரல் 01 இல் நிறுவப்பட்ட 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 4,960 | 9,609 | 4,769 | 4,840 | 4,760 | 5,090 | 3,936 | 4,414 |
| வாடகை | 10,099 | 12,313 | 10,180 | 2,132 | 8,565 | 7,458 | 7,286 | 2,638 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 602 | 397 | 326 | 70 | 802 | 281 | 281 | 70 |
| ஏனைய வருமானம் | 107,422 | 107,603 | 74,991 | 32,611 | 115,616 | 105,043 | 82,936 | 77,195 |
| மொத்தம் | 123,083 | 129,922 | 90,266 | 39,653 | 129,743 | 117,872 | 94,439 | 84,317 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 4,414,043 தொகையான ஆரம்ப நிலுவையில் ஆண்டில் ரூபா 538,534 அதாவது 12 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபையின் நிலுவை வருமானம் அறவீட்டின் செயன் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு எதிர்காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாவத்தகம பொது சந்தையின் 7 கடைகளுக்கு ரூபா 720,000 இற்கு குத்தகைக்கு வழங்குவதற்குரிய குத்தகை ஒப்பந்தம் 23 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு இணங்காத வகையில் குத்தகையாளரால் வேறு தரப்பினருக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கி ரூபா 3,570,000 ஆன தொகை வருடாந்தம் உழைக்கப்பட்டிருந்தது. உப குத்தகை வழங்கல் தொடர்பாக குத்தகை உடன்படிக்கையின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் எவ்வித | உப குத்தகை வழங்கல் தொடர்பாக குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்கு ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) கடை குத்தகை ஒப்பந்தத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் குத்தகையாளார்கள் கடையின் உரிமையை வேறொரு நபருக்கு விற்கவோ மாற்றவோ முடியாது என்றாலும், மாவத்தகம பொதுச் சந்தையின் 06 கடைகள் ரூபா 7,800,000 இற்கு ஏனைய தரப்பினருக்கு விற்கப்பட்டோ அல்லது கையளிக் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கையின் 12 ஆம் பிரிவிற்கு முரணாக சபையின் அங்கீகாரம் இல்லாமல் சில கடைகள் பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்தது. 17 மற்றும் 24 ஆகிய கடைகள் வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கடையின் உரிமையை வேறொரு நபருக்கு விற்றல் அல்லது மாற்றுதல் முறையாக மேற் கொள்ளப்பட வேண்டியதுடன் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கபபட வேண்டும் முடியாது என்றாலும், | தற்போதய உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்கு ஆணையாளரின் அங்கீகாரத்திக் கீழ் பரீட்சிக்கப்பட்டு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் |

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 2,332,333 நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 40,000,000 முத்திரைக் கட்டணங்கள் ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிடைக்க வேண்டிய வருமானம் சரியானது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் 14 விடயங்களுக்காக உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. | சபையின் தேவைப்பாட்டின் பிரகாரம் உப விதிகளை தயாரித்தல் மற்றம் விதிக்கப்பட்டுள்ள உப விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுககப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## (ஆ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை புதிய கட்டிட நிர்மாணம் கட்டி திட்டங்களுக்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 693,874 தொகையொன்று தனியார் தீட்டமிடல் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் நிர்மாணம் ஆரம்பிக்கப்படாமல் இருந்துடன் மீளாய்வாண்டில் ரூபா 2,300,753 செலவிடப்பட்டு பழைய சபை மண்டப திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவைப்பாட்டின் பேரில் சபை கட்டிடம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

## (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) கொம்போஸ்ட் ஹலர் இயந்திரம் செயற்படாமை மற்றும் பேல் இயந்திரமொன்று பயன்படுத்தாமல் பொலித்தீன் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக உர உற்பத்தி பயனற்றதாக இருந்தது. | கொம்போஸ்ட் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் வினைத்திறனாக செயற்பட வேண்டும். | ஹலர் இயந்திரம் திருத்தம் செய்யப்படும். பேல் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மூன்று ஆண்டுகளுக்கு மன்னர் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் நிர்மாண தவறு காரணமாக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமையால் கமலசலகூட கழிவுகள் நிலையல் வளவில் புதைக்கப்பட்டிருந்தது. | கழிவுகளை சுகாதார பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 3.2 முகாமைத்தவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவத்தகம நகரின் ம்தியில் அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக பலவருடங்களுக்கு மன்ன் கோவையொன்ற திறக்கப்பட்டிருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 09 பதவிகளுக்குரிய 49 உததியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டனர. அதற்கிடையே 17 அபிவிருத்தி உததியோகத்தர்கள் உள்ளனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனரை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உள்ளூராட்சிமன்றி நதிணைக்களத்தினால் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆவர். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற, மரணித்த மற்றும் இடமாற்றம் பெற்ற 11 உத்தியோகதத்ர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 553,252 ஆக இருந்தது. | அறவிட வேண்டிய கடன்களை நிர்ணயிக்கப்பட்ட படி அறவிடப்பட வேண்டும். | ஊழியர் கடன் அறவிடுவதற்கும் எதிர்காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படம். ஓய்வுபெறற் ஊழியர்களிடமிருந்து பணிக்கொடை கொடுப்பனவின் போது கடன் மீதிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை

---------------

**ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகன தொகுதியென்றை நிர்மாணிக்கும் வேலையின் 01 ஆம் கட்டத்தின் 12 ஆவது வேலை விடயம் மற்றும் 02 ஆம் கட்டத்தில் 11 ஆம் இலக்க வேலை விடயத்தின் கழ் 0.47 மி.மீ. சின்க் அலுமினியிம் கூரை தகடு கூரைக்கு இடப்பட்டதாக குறிப்பிட்டு ரூபா 574,454 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது அக்கூரைத் தகடுகள் 0.40 மி.மீ. அளவிற்கு அண்மித்திருந்தது. | நியம விவரக் குறிப்புக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முறையாக மேற்கொள்ள்பபட வேண்டும். | கலிபர் உபகரணம் மூலம் விரிவான அளவீடு பெற்றக்கொள்ள முடியாமையால் சரியான அளவீடுகள் பெற்றுக்கொள்ள முடியவில்லை. |
| (ஆ) | பொதுச் சபை கூட்ட மண்டபத்திற்கு நுழையம் வீதிக்கு அச்சுக்கல் பிடிக்கும் மதிப்பீட்டின் பிரகாரம் கொங்கிரீட் ஆதார சுவர் 225 மி.மீ உயரம் 150 மி.மீ. அகலம் வரும் வகையில் | நிர்மாண நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விவரக் குறிப்புக்களின் பிரகாரம் மீண்டும் நிர்மாணித்து தருமாறு ஒப்பந்தக் காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது உயரம் 100 மி.மீ. ஆகவ்ும் அகலம் 140 மி.மீ என்ற வகையில் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அண்மித்திருந்தது.